

# தம்பலகாமம்

## பட்டிமேடு சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய

## மஹா கும்பாபிஷேக மலர்

31-03-2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# தம்பலகாமம் பட்டிமேட்டு
# சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம்
# மஹா கும்பாபிஷேக விழாச் சிறப்பு மலர்

31.03.2002

மலர் ஆக்கம்

வே. வரதசுந்தரம்

*வெளியீடு*

**கோயில் அறங்காவலர்**

**தம்பலகாமம்**

**திரு சுப்பிரமணியம் காளியப்பு சிவசுப்பிரமணியம் (J.P)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ௐ

# சுவாமி கங்காதரானந்தாஜி அவர்களின்



## அருளுரை

பட்டிமேட்டு சிந்தாமணி விநாயகர் ஆலயம் சரித்திர வரலாறு நிறைந்த ஸ்தலத்தில் அமைந்து இருப்பதால் இந்த ஆலயத்திற்கு ஒரு தனிச்சிறப்பு இருக்கின்றது. விநாயகருடைய ஆருள் ஆசியால் ஊர் மக்களுடைய ஒத்துழைப்புடன் திரு.சு.கா சிவசுப்பிரமணியத்தின் நிர்வாகத் தலைமையில் இவ்வாலயம் நல்ல முறையில் பரிபாலனம் செய்யப்பட்டு வருகின்றது.

ஆலய நிர்வாகத்தின் பெரும் முயற்சியால் நடந்தேறிய இப் புனித கும்பாபிஷேகத்தால் இந்த ஆலயம் மேலும் புனித மடைந்து கூடிய சைதன்யம் பெற்று இருக்கின்றது.

இதில் வீற்றிருந்து அருள் புரியும் சிந்தாமணி விநாயகர் தனது பக்த ஜனங்களுடைய கிலேசங்களைத் தீர்த்து சம்பூரண சுகத்துடன் வாழ்வதற்கு நன்றாக அருள் புரிய வேண்டும்.

(சென்ற கும்பாபிஷேக விழாவின் போது சுவாமி கங்காதரானந்தா அவர்கள் அருளிய ஆசியுரை)

சிவயோக சமாஜம்,
திருக்கோணமலை.
23-08-1982.

சுவாமி. கங்காதரானந்தாஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

இராம கிருஷ்ண மிஷன்
இலங்கைக் கிளை
40, இராமகிருஷ்ணா வீதி,
கொழும்பு-06.

# சுவாமி ஆத்மகனாநந்தா அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

ஆதிகோணேஸ்வர பெருமான் வதியும் தம்பலகாம திருப்பதியைச் சேர்ந்த பட்டிமேடு பகுதியில் அமைந்துள்ள சிந்தாமணி பிள்ளையார் ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டு, எதிர்வரும் மார்ச் மாதம் 31 ம் திகதியன்று கும்பாவிஷேகம் நடைபெற உள்ளதென அறிந்து இறையருளைப் போற்றுகிறோம்.

"கையில் எண்ணெய் தடவிக்கொண்டு பலாப்பழத்தை அறுத்தால் அதன் பிசின் கையில் ஒட்டாது." அவ்வாறே இறைபக்தியை வளர்த்துக்கொண்டு உலக வாழ்க்கையில் ஈடுபட்டால், உலகக் கவலைகள் மனதை அண்டாது" என்பார் பகவான் ஸ்ரீராமகிருஷ்னர்.

பக்தியை வளர்க்கும் இடங்களே ஆலயங்கள், தூய்மையையும், அமைதியும் நிறைந்த அங்கு, இறை முன்னிலையில் மனம் எளிதில் ஒன்றுபடுகிறது. எனவே ஆலயங்களைப் பாதுகாப்பது அவசியம்.

ஆலய வழிபாடு ஜீவசேவையில் நிறைவு பெற வேண்டும் என நமது சமயம் கூறுவதையும் நினைவில் கொண்டு நம்மால் இயன்ற பொதுச்சேவையையும், தான தருமங்களையும் செய்தல் அவசியம்.

கும்பாவிஷேக விழா சிறப்புடன் நடந்தேறி மக்கள் வாழ்வில் நலங்கள் பொங்க இறைவன் அருள்புரியப் பிரார்த்திக்கிறோம்.

✲✲✲✲✲

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**சிவஸ்ரீ வேதாகமமாமணி சோ. ரவிச்சந்திரக் குருக்கள்**

**ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்**

**ஆலய பிரதம குருவும் ஆதீனகர்த்தாவும்**

**திருக்கோணமலை.**

# ஆசி உரை

ஸ்ரீ மகா கணபதேநம
ஓம் கஜானனம் பூதகணாதி ஸேவிதம்
கபித்த ஜம்பூ ப வ ஸார ப கஷிதம்
உமா சுதம் சோக வி நாச காரணம்
நமாமி விக்னெஸ்வர பாத பங்கஜம்.

மூலாதாரத்து மூண்டெழு கனலைக் காலால் எழுப்பிக் கருத்தறிவிக்கும் கடவுள் விநாயகப் பெருமான்.தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாத முழுமுதற் தலைவன் விக்னேஸ்வரன்.எந்த மூர்த்திகளுக்கும் இல்லாத சிறப்பு அம்சமாகிய ஓங்கார வடிவான யானை முகத்தையுடைய பிரணவ சொரூபன், கஜானகன் பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன் பிள்ளையார் என்னும் திருநாமத்தை உடையவன் எந்தக் காரியத்தைச் செய்யத் தொடங்கும் போதும்காரிய சித்திக்காக முதலில் பிள்ளையாரைத் துதித்தே ஆரம்பிப்பார்கள். எல்லா ஜீவாத்மாக்களுடைய வல்வினங்களை நீக்கி நல்வினப் பயன்களை நல்குபவர் பிள்ளையார். பிள்ளையார் வழிபாடு காணாபத்தியக் கோட்பாட்டின்படி நடைபெற்று வருகிறது.

தம்பலகாமம் பட்டிமேட்டில் எழுந்தருளியிருந்து அருள் பாலிக்கும் சிந்தாமணிப் பிள்ளையாருடைய ஆலயம் சுமார் எண்பது வருடப் பழமை வாய்ந்தது. இந்த ஆலயத்தில் சிவ ஸ்ரீ சோமசுந்தரக்குருக்கள் அவர்கள் ஆகம முறைப்படி பூஜை செய்து வந்ததை நாம் அறிவோம்.

சமீபத்தில் நடைபெற்ற வன் செயல்களால் பாதிக்கப்பட்ட சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயத் திருப்பணிகள் சிந்தாமணிப் பிள்ளையாருடைய திருவருளால் நிறைவேறி 31-03-2002 ஞாயிற்றுக் கிழமை மகா கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியுள்ளதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

திருப்பணிகளை நிறைவேற்றிக் குட முழுக்குக் காணும் அன்பர்கள் பக்தர்கள் அடியார்கள் அனைவருக்கும் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் திருவருள் பாலிக்க வேண்டுமென்று திரிகரண சுத்தியோடு பிரார்த்தித்து ஆசிர்வதிக்கின்றேன்.

லோகா சமஸ்த சுஹினோ பவந்து.

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதிஷ்டா குரு சிவஸ்ரீ முத்து சற்குருநாதக் குருக்கள் அவர்களின்



# ஆசி உரை

தெட்சண கைலாயம் எனப்பெயர் பெற்ற திருக்கோணமலையின் கண்ணே தம்பலகாமம் பகுதியிலே வயல் சூழ் பட்டிமேடு என்றும் கிராமத்திலே வீற்றிருக்கும் அருள் மிகு சிந்தாமணிப் பிள்ளையார் கோவில் காலத்தினால், பலகாலம் புதுப்பிக்கவோ கும்பாபிஷேகமோ நடைபெறவில்லை. புதிதாக ஆலயம் கட்டுவதையும் சிதிலம் அடைந்த ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதையும் அதன் பேறுகளையும் தெரிந்து கொள்வது சிறப்பாகும்.

"நூதனம் யேப்ரகுவர்த்தி இவுடகை ரஸ்மனாபவா ஸ்வர்க்கே தே பரமோதந்தே, யாவத்திஷ்டதி நிர்மலம்

உரை :-
செங்கல்லாலோ கருங்கல்லாலோ புதிதாக கோவில் கட்டுகிறார்களோ அவர்கள் ஆலயம் உள்ளளவும் ஸ்வர்க்கத்தில் இருப்பார்கள் ஜீர்ணம் அடைந்த ஆலயத்தை

"பக்தம் சிவாலயம் யேச ப்ரகுர்வத்தி நரோத்தமா
ப்ராப்பனுவந்தி பலம் தேவைத் விகுணம் நாத்ரசம்சய"

புண்ய சீலர்கள் பழுதடைந்த ஆலயத்தை புதுப்பித்து திருப்பணி செய்தால் ஸ்காகுதம அவர்கள் இரட்டிப்பான பலனை அடைவார்கள் என ஸ்காந்த புராணம் கூறுகின்றது. மேலும் இவர்கள் பெரும் புண்ணியத்தையும் அளவிடற்கரிய பெரும் பேறுகளையும் அடைகிறார்கள்.

இக்கோவில் தர்மகர்த்தா, சிவாச்சாரியார், நிதி அளித்தவர்கள், சரியைத் தொண்டு முதலான செய்தவர்கள் இம்மையில் யாவும் பெற்று சிவப்பத பேறு அடைவது திண்ணம்.

கும்பாபிஷேக நினைவாக வெளிவரும் மலர் சிவபுண்யம், விநாயகர் சிறப்பும் சமய கட்டுரைகள் முதலிய சிறப்புகளை அறிய நல்வாய்ப்பாகும். யாவரும் படிக்க வேண்டும் நற்பயன் அடைய வேண்டும்.

எம் குலதெய்வம் அருள்மிகு ஸ்ரீ முத்துமாரி அம்பாளின் பாதமலர் நல்லாசியை உரித்தாக்கி நிறைவு பெறுகிறேன்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க.

பிரதிஷ்டா குரு
கிரியாகிரம வித்ய ஜோதி
சிவஸ்ரீ முத்து சற்குருநாதக் குருக்கள்
மடத்தடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம்
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



இரா. சம்பந்தன்
பாராளுமன்ற உறுப்பினர்,
திருக்கோணமலை மாவட்டம்

திருக்கோணமலையின் பொன்விளையும் பூமியாக விளங்கும் தம்பலகாமத்தில் எழுந்தருளியிருக்கும் பட்டிமேடு சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் புதுப்பிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் 31-3-2002 நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றேன்.

பழம் பெரும் தமிழ்க்கிராமமான தம்பலகாமத்தில் வாழ்ந்த பரம்பரையினால் 1917 ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டதுதான் சிந்தாமணி பிள்ளையார் ஆலயம்.

விநாயகர் விக்கினங்களை நீக்கி, நம்புத்தியை தீட்டி நல்ல அறிவைத்தரும் தெய்வம். பெரிய தத்துவத்தையும் எளிதாய் தம் உருவத்தின் மூலம் விளக்கும் தெய்வம்.

சிறந்த ஞானத்தை அருள்பவர்.
பாமரர்க்கும் இவர்தான் முதற்கடவுள்
பண்டிதர்க்கும் இவர்தான் முதற்கடவுள்.

விக்கினங்கள் வராமல் காத்தருளும் பெருமான் விநாயகர். ஆதலாற்றான் எக்காரியஞ் செய்வதற்கு முன் விநாயகருக்கு முதல் வணக்கம் செலுத்தப்படுகின்றது. ஆலயங்களில் கூட விநாயகர் பூசையின் பின்னரே பூசைகள் நடைபெறுவதைக் காணலாம்.

சிந்தாமணி பிள்ளையார் ஆலய குடமுழுக்கு வைபவம் இனிது நிறைவேறி எல்லாம் வல்ல விநாயகப் பெருமானின் அருளால் தம்பலகாமம் வயல் செழிக்க, மக்கள் செழிக்க, நாட்டில் சாந்தி சமாதானம் செழிக்க, எம்பெருமானின் பாதார விம்பங்களில் விழுந்து வணங்கி வாழ்த்துகின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்
இறைவன் அடி சேராதார்.

-திருக்குறள்

இதன் பொருள் இறைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் பிறவியாகிய பெரிய கடலைக் கடக்க முடியும். மற்றவர் கடக்க முடியாது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று

-கொன்றை வேந்தன், ஔவையார்.

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை அறிந்து கடவுளை வழிபட்டு கடவுளை அடைதலே ஆகும்.

- ஆறுமுகநாவலர் பெருமான்.

தம்பலகாமம் பட்டிமேட்டிலுள்ள சிந்தாமணிப் பிள்ளையார் கோயில் மிகப் பழமை வாய்ந்த ஆலயம். பக்கத்திலுள்ள இராமகிருஷ்ண சங்க சாரதா மகளிர் வித்தியாலயத்தில் இருவருடங்கள் ஆசிரியப் பணிபுரியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இதனால் இந்த ஆலயத்தைப் பற்றியும் அறிய முடிந்தது.

ஆலயத்தில்கும்பாபிஷேகம் நடக்கப் போகிறதை அறிந்து பெருமகிழ்வடைகிறோம். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. கோபுர தரிசனம் கோடி புண்ணியம்பண்படுத்துவது கோயில்பாடசாலையுமே. ஒரு கிராமத்தின் இரு கண்கள். இரண்டின் வளர்ச்சியே கிராமத்தின் உயர்வு.

ஆலயங்கள் பக்தியை வளர்ப்பதோடு பலகலைகளையும் மக்கள் கற்கும் நிலைக்களனாகவும் இருக்க வேண்டும். சமய நூல்கள் நிறைந்த நூல் நிலையற்கள் ஆலயங்களில் அமைய வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை சமய வகுப்புக்கள் சமயப் பிரசங்கங்கள் நடைபெற வேண்டும். அன்பும் பண்பும் நிறைந்த மக்களை ஆலயம் உருவாக்க வேண்டும். எல்லோரும் கடவுளுடைய பிள்ளைகள் என்பதை உணர்ந்து மக்கள் சேவை செய்ய வேண்டும்.

எல்லாம் வல்ல சிந்தாமணிப் பிள்ளையார் அருளினால் நாட்டில் அமைதியும் சமாதானமும் சாந்தியும் ஏற்பட்டு மக்கள் எல்லோரும் இன்புற்று வாழப் பிரார்த்திப்போம்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்
அன்பே சிவமாவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

- திருமூல திரு மந்திரம்.

இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
ஆனந்தம்

முத்துக்குமார சுவாமி கோயிலடி
திருக்கோணமலை

பொ.கந்தையா
காந்தி ஆசிரியர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

## ஞானசிரோமணி - பண்டிதர் இ. வடிவேல் அவர்களின்

# ஆசியுரை

சிந்தாமணி என்பது தெய்வீக சக்தி நிறைந்த இரத்தின மணிகளில் ஒன்று. இது இந்திரன் அணிந்திருக்கும் உயர்ந்த மணி. இந்திரன் உலகத்துக்கு மழையை வளங்கி நாட்டை வளம்பெறச் செய்யும் கடவுள்.

"விசும்பிற் துளி வீழினல்லால் மற்றாங்கே
பசும் புற் தலை காண்பதரிது."

"ஏரினுழார் உழவர் புயலென்னும்
மாரி வளங்குன்றியக் கால்"

என்றார் திருவள்ளுவர்.

துளி - சிறு மழை , புயல் - பெருமழை

மழை வளம் குன்றினால் மனை வளம் குன்றும். மழைக் கடவுளாகிய இந்திரன் சிந்தாமணியின் ஆற்றலால் மழையைப் பெய்விக்கின்றான்.

பட்டிமேட்டில் எழுந்தருளி இருந்து அருள் பாலிக்கும் கடவுள் சிந்தாமணிப் பிள்ளையார். இவர் அற்புதமான மூர்த்தி கொள்ளை நோயிலிருந்து தம்பை நகர் மக்களைக் காப்பாற்றி அருள் புரிந்த மூர்த்தி.

வன்செயல் காரணமாக சிந்தாமணிப் பிள்ளையார் கடத்தப்பட்டு மண்ணிலே மறைத்து வைக்கப்பட்டிருந்தார். ஆனால் அவருடைய திருவருட் சக்தியினால் தானே விரும்பிக் கோயில் கொள்ளும் பட்டிமேட்டுக் கோவிலுக்கே மீண்டும் வந்தமர்ந்துள்ளார்.

1915 ஆம் ஆண்டு பட்டிமேட்டில் வந்தமர்ந்த சிந்தாமணிப் பிள்ளையாருக்கு 1933 ஆம் ஆண்டு கற்கோவில் அமைத்துக் கும்பாபிஷேகம் செய்யப்பெற்றது.

திருமதி நமசிவாம் தங்கம்மா அம்மையார் கட்டிய கற்கோவிலில் அமர்ந்து அருள் பாலித்துக் கொண்டிருந்த சிந்தாமணிப் பிள்ளையாருக்கு சிவதர்ம வள்ளல் திருவாளர் சுப்பிரமணியம் காளியப்பு அவர்கள் 1933 ஆம் ஆண்டு முதற்கும்பாபிஷேகம் செய்வித்தார்.

வன்செயலால் பாதிக்கப்பட்டிருந்த சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலுக்கு புனருத்தாரணத் திருப்பணி நிறைவேறி 31-03-2001 இல் மகா கும்பாவிஷேகம் நடைபெறுகின்றது.

ஆலயம் தொழுவது சாலவும் நன்று என்பதால் சிந்தாமணிப் பிள்ளையார் கோவிற் திருப்பணிகளைச் செய்து மக்களை வழிபாட்டில் ஈடுபடுத்தும் இந்த அரும்பணி சிறப்புறவும் கும்பாபிஷேகம் இனிது நிறைவேறவும் தம்பை நகர் ஆதி கோணை நாயகர் அருள்பாலிப்பாராக.

ஓம் சாந்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

### திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் "சிவஞானச் செல்வர்" செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

விளைகளைத் தீர்க்க வல்ல வேழமுடைய விநாயகப் பெருமான் வரலாற்றுச் சிறப்புமிக்க திருத் தம்பலகாமப் பகுதியிலுள்ள பட்டிமேடு என்னும் பழந் தமிழ்க் கிராமத்தில் பட்டிமேடு சிந்தாமணிப் பிள்ளையாராகக் கோயில் கொண்டு விளங்குகின்றார் என்றால் அது மிகையாகாது.

கடந்த கால வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட இப் பகுதியில் எமது கலாசாரத்தை பிரதிபலிப்பதாக இவ் ஆலயம் மீண்டும் திருப்பணி செய்யப்பட்டுக் கும்பாபிஷேகம் நடைபெற இருப்பது இந்து இளைஞர்களாகிய எமக்கெல்லாம் மகிழ்வையும் மனநிறைவையும் தருகின்றது.

இத் திருப்பணியில் முன்னின்று உழைத்த சிவநெறி அன்பர் திரு. கா. சிவசுப்பிரமணியம் அவர்களுக்கும் மற்றும் தொண்டர்கள், அன்பர்கள் அனைவரும் சிந்தாமணிப் பிள்ளையாரின் திருவருள் நிறைய வேண்டும் எனப் பிரார்த்தித்து எமது மேலான வாழ்த்துக்களையும் பணிவன்புடன் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றோம்.

வணக்கம்

# ஆசிச் செய்தி

**தாயார் முலை தந்து தாபரித்தாய் என் தாயின் உள்ளே**
**வாயால் வளத்தி மலர் கொண்டு அர்ச்சித்து வைகலுமே**
**நாயேன் பணிய நயத்தருளாய், நெல் வளஞ் சூழ்ந்து**
**தாயோர் துதிக்கும் தம்பலகாமம் பதி தொந்தி ஐங்கரனே.**

திருஞானசம்பந்தரால் பாடப்பெற்ற கோணேஸ்வரத்தின் அயல் கிராமமாகிய நெல் வயல் சூழ் தம்பலகாமத்தின் பட்டிமேடெனும் பதியுறை சிந்தாமணிப் பிள்ளையார் என்றும் என் சிந்தனையுள் வீற்றிருக்க அவர் பாதம் இறைஞ்சி நிற்கின்றேன்.

இவ்வாலயம் கிட்டத்தட்ட 80 வருடம் பழமை வாய்ந்ததும் பல புதுமைகளையும் கண்ட ஆலயமாகத் திகழ்ந்தது. இவ்வாலயம் ஓலைக் கொட்டிலாக அமைந்திருந்ததை சுப்பிரமணியம்,காளியப்பு குடும்பம், கோபாலப்பிள்ளை கதிர்காமத்தம்பி குடும்பம் மருகப்பர் கோணமலை குடும்பம் ஏனைய பட்டிமேட்டு அன்பர்களும் சேர்ந்து விதிப்படி ஆலயத்தினை அமைத்து 1933 இல் கும்பாபிஷேகம் செய்து வைத்தனர். இதன் பின்னரும் திருமதி மகமாகிபிள்ளை காளியப்பு அவர்களின் முயற்சியினால் ஓர் கும்பாபிஷேகம் சைவக் குருக்கள் மூலமாக நடைபெற்றது. இறுதியாக நடைபெற்ற கும்பாவிஷேகத்தினை காளியப்பு சிவசுப்பிரமணியம் அவர்கள் ஏனைய மக்களின் உதவியுடன் பஞ்ச குண்டமிட்டு நடாத்தி வைத்தனர். தொடர்ந்து அவரது பராமரிப்பிலேயே ஆலயம் கவனிக்கப்பட்டு வந்தது அவ்வேளை நாட்டின் ஆலயங்கள் கலவரங்கள் காரணமாக மக்கள் வெளியேறவும் ஆலயக்குருக்கள் சுகயீனம் காரணமாக அவரும் வெளிமாவட்டம் செல்ல நேர்ந்தது. அவ்வேளை இறை தொண்டு பூர்வீக புண்ணியம் என்பது போல அத்தொண்டு செய்யும் பாக்கியம் எனக்கும் எனது மகன் சோமஸ்கந்தனுக்கும் கிடைத்தது போலும் 31-03-2002 இல் நடைபெற உள்ள இக் கும்பாவிஷேகத்தினையும் கண்டு கொள்ளும் பெரும் பாக்கியத்தை அருளிச் செய்த கணபதியை கரம் கூப்பி சிரம் தாழ்த்தி அஞ்சலி செய்வோமாக.

கோ.நடராசா
வைராவியர்.

பட்டிமேடு
தம்பலகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. சு.கா. சிவசுப்பிரமணியம் அவர்கள்
எண்ணைக் காப்பிடுதல்.



Dr. கோ.க. கிருஷ்ணதாஸன் அவர்கள்
எண்ணைக் காப்பிடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓய்வு பெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர்
## பொ.சித்திரவேல் அவர்களின்



# ஆசியுரை

தம்பலகாமம் ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த கிராமமாகும். கந்தளாய்க் குளத்தின் நீர்பாய்ச்சி வயல் செய்யும் காட்சியானது மனதிற்கு மகிழ்விக்கின்றது. இந்த சூழலில் தான் பழமை வாய்ந்த குளக்கோட்டு மன்னின் திருப்பணியிலே அமையப் பெற்றதும் தற்சமயம் வானுயர்ந்து அழகிய கோபுரத்துடன் காட்சியளிக்கும் சிறப்பு கண்கொள்ளாக் காட்சியாகும்.

பன்னிரு திடல்களைக் கொண்ட பழம்பெரும் கிராமமான தம்பலகாமத்தின் நுளைமுனையிலே அமைந்துள்ளது. பட்டிமேடு என அழைக்கப்படும் . திடல் இங்குதான் சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் அமைந்துள்ளது. இது 1916 ம் ஆண்டளவில் தான் நிறுவப்பட்டதாக அறியமுடிகிறது. இவ் ஆலயம் சுப்பிரமணியம் காளியப்பு குடும்பத்தினரால் நடாத்தப்பட்டு வந்தது.

வன்செயல் நடைபெற்ற காலப்பகுதியில் இவ் ஆலயத்தில் இருந்த பிள்ளையாரை மனித இதயம் அற்ற ஒரு கும்பல் கடத்திச் சென்ற போதிலும் அவரது கருணையால் திரும்பவும் அவர் தன் பதியை வந்தடைந்தமை விந்தையானது.

இவ் ஆலயம் அதன் போது புனரமைக்கப்பட்டு ஆலயத்தின் கும்பாபிஷேகம் வெகு விரைவில் நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுகிறது. இவ்வாலயம் சீரும் சிறப்பும் உற்று விளங்க எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

கரைச்சித்திடல்
தம்பலகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பலகாமம் இந்து இளைஞர் மன்றத் தலைவர் சு. பாஸ்கரலிங்கம் அவர்களின்

## வாழ்த்துச் செய்தி



*"வேள முகத்து விநாயகனைத் தொழ*
*வாழ்வு மிகுந்து வரும்"*
*வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழத்*
*துள்ளியோடுந் தொடர்ந்த வினைகளே.*

கோயிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணாமலையென திருஞான சம்பந்தரினால் புகழ்ந்து பாடப்பெற்ற திருத்தலம் அமைந்துள்ள புண்ணிய பூமியிலே செந்நெல் வயல் நிலங்களும் பல வழங்களும் அமைந்தும் (நாதேஸ்வரப் பெருமான் அருளாட்சி புரிகின்ற) ஒருங்கே ஹம்சகமனாம்பிகா சமேத ஆதி கோண சைவத் திருநகராம் தம்பை நகரிலே ஆதி கோண நாதேஸ்வரப் பெருமானுக்கு குளக்கோட்டு மன்னன் வைத்த திருப்பணியை செவ்வனே செய்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற மக்கள் மத்தியில் சிந்தாமணியென அருள் மணியோசை எழுப்பிக் கொண்டு கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் பட்டிமேடு ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு புதுப் பொலிவுடன் விளங்கக் காரணமாக இருக்கும் காளியப்பு குடும்பத்தினரின் வாரிசாக விளங்குபவரும் சிவப்பணியில் தன்னை அர்ப்பணித்த ஆதி கோணநாயகர் கோயில் அறங்காவலர் சபைத் தலைவரும் இக் கோயிலின் அறங்காவலருமாகிய திரு.சுப்பிரமணியம் காளியப்பு சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் ஆலயத்தின் மகா கும்பாவிஷேகம் நடைபெறும் இவ் வேளையில் வெளியிடப்படுகின்ற இம்மலர் சிறக்கவும் ஆலயம் மென்மேலும் சிறப்புறவும் எமது நல் வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

என்றும் போல பட்டிமேடு சிந்தாமணிப் பிள்ளையார் நம்பிய பக்தர்களைக் கைவிடமாட்டார் என்பது எமது நம்பிக்கை

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறங்காவலரின் அருளுரை



பட்டிமேட்டு ஆலயடிப்பிள்ளையார் என்ற நாமத்துடன் சிறிய கொட்டிலில் வழிபட்டுவந்த விநாயகர் ஆலயம் 1916 ம் ஆண்டுக்கு முற்பட்டதாகும். 1916-1917 ம் ஆண்டுப் பகுதியில் (கொள்ளை, கோதாரி) என அழைக்கப்படும் தொற்று நோய் தம்பலகாமப் பகுதியில் பரவிய வேளை ஆங்காங்கே மக்களைப் பலி கொள்ளத் தொடங்கியது அதனால் மக்கள் எங்கும் வெளியேறாதவாறு தடுத்து வைக்கப்பட்டனர். ஆலயப்பகுதியில் தடுத்துவைக்கப்பட்ட பட்டிமேட்டு மக்கள் ஒன்று கூடியிருந்த வேளையில் தான் பிள்ளையாருக்கு மண்டபம் ஒன்றினை அமைக்க வேண்டும் என்ற சிந்தனை உருவாகியது. அன்று பட்டிமேட்டில் மட்டும் தான் தொற்று நோய் பரவவில்லை. அங்கே பிள்ளையாரை மக்கள் காவல் செய்தார் எனவும், அப்படியான ஒரு காட்சியினை திரு சுப்பிரமணியம் காளியப்பு கனவில் கண்டதாகவும் கதையுண்டு. 1925 ம் ஆண்டளவில் மூலஸ்தானம், மகாமண்டபம், பலிபீடமண்டபம் ஆகியன கட்டுவதற்காக திரு காளியப்பு அவர்களின் மாமியார் நமசிவாயம் தங்கம்மா அவர்களால் கல் நாட்டப்பட்டது. கறுவல் தம்பி,முருகப்பர் ஆகியோரின் பணி மிகவும் பாராட்டுதற்குரியது. இவர்களே ஆரம்ப கர்த்தாக்கள் மூலஸ்தானம் திரு . மு. கோணாமல அவர்களும், மகாமண்டபம் திரு சு.காளியப்பு அவர்களாலும், பலிபீட மண்டபம் திரு கோபாலு கதிர்காமத்தம்பி அவர்களும் கட்டிமுடித்தனர். மூலஸ்தான கட்டுவேலை தென்னிந்திய திருகுப்புச்சாமி ஆசாரியார் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டது. ஆனாலும் இவரது பணி இடைநிறுத்தப்பட்டு திரு நாகரத்தினம் ஆச்சாரியாரின் பெரும் பங்குடன் அவரது தமையனார் நாகலிங்கம் ஆசாரியார் அவர்கள் திருப்பணி வேலையினை முடித்து 1933 தைத் திங்கள் புனர் பூச நன்நாளில் பிரம்ம ஸ்ரீ ஞானசேகரக் குருக்கள் அவர்களினால் ஒக குண்ட கும்பாவிஷேகம் நடாத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 10 நாள் அலங்கார உற்சவம்,நவராத்திரி போன்ற விழாக்கள் நடைபெற்று வந்தன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின் விழாக்கள் அனைத்தும் நின்றுவிட்டன.

1948 ம் ஆண்டு சுப்பிரமணிய உடையாராது காளியப்புவின் மனைவி மகமாயிப்பிள்ளை மீண்டும் மோர் கும்பாவிஷேகத்தினை வைகாசித் திங்கள் புனர்பூச நன்நாளில் ஏக குண்டமிட்டு மயில் வாகனக்குருக்கள் மகன் சிவசிறி சிவசுப்பிரமணியக் குருக்கள் மூலமாக நிறைவு செய்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1972 ம் வருடம் திருகோணமலை பிரம்ம ஸ்ரீ சிவசுப்பிரமணியக் குருக்கள் மூலம் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட இச் சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் இம் முறையும் திரு நாகரத்தினம் ஆசாரியார் அவர்களாலேயே ஆரம்பித்த போதிலும் அவ் வேலை வியாழ வரியுடன் நின்றுவிட அராலியூரைச் சேர்ந்த அருட்கலைத் திலகம் திரு சு.மகேஸ்வரன் ஆசாரியார் அவர்களினால் சிறந்த வேலைப்பாடுகளுடன் கட்டிட வேலைகள் முடிக்கப்பட்டு கதை விக்கிர அமைப்பு வேலைகள் தென்னிந்திய ஸ்தபதி திரு எம். கே. குருசாமி குழுவினரால் அழகுற அமைக்கப்பட்டு புதிதாக வைரவர், நாக தம்பிரான், மணிக்கோபுரம் ஆகியவற்றுடன் ஆலயம் அழகு மிளிர 1982 ம் ஆண்டு ஆகஸ்ட் 23 ம் திகதி பஞ்ச குண்டம் அமைத்து சுன்னாகம் பிரம்ம ஸ்ரீ நா.சர்வேஸ்வரக்குருக்கள் அவர்களினால் கும்பாபிஷேக வைபவம் நிறைவு செய்யப்பட்டது.

தொடர்ந்து பூசை, விழாக்கள் என்பன நடைபெற்று வரும் வேளை நாட்டில் கலவரங்கள் அனர்த்தங்கள், வன்செயல்கள் இடம் பெற்ற காரணத்தினால் மீண்டும் ஆலய பூசை விழாக்கள் என்பன நின்று விட்டன. இவ் வேளையில் அற்புதம் என்று சொல்லக்கூடிய ஓர் சம்பவமாக உற்சவ மூர்த்தியான விநாயகர் சிலை களவாடப்பட்ட போதிலும் களவு செய்தவரால் அச் சிலையினை ஹபரணை சந்திக்கு அப்பால் கொண்டு செல்ல முடியாதபடி திரும்பவும் அச் சிலை கோயிலை வந்தடைந்தது ஒரு பெரும் வியப்பும், அதிசயமும் என்றே கூறலாம்.

தற்சமயம் இவ்வாலயம் மீளவும் புனருத்தாபன வேலைகள் உள்ளூர் இரத்தினராசா சசிகுமார் அவர்களினால் திருப்பணித் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டு இன்று இக் கும்பாபிஷேகம் நடைபெற இறையருள் கைகூடியமை கண்டு உளம் மகிழ்கின்றேன்.

சுப்பிரமணியம் காளியப்பு சிவசுப்பிரமணியம்.
தம்பலகாமம்.



கட்டிட திருப்பணி திருத்த
வேலைகள் செய்தவர்
இரத்தினராசா சசிகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பலகாமம் பட்டிமேட்டுச் சிந்தாமணி விநாயகர் வரலாறு

*சந்திரசேகரம்பிள்ளை ஜெயச்சந்திரன்*

செந்நெற் கழனிகள் பல சூழ்ந்து விளங்கத் தம்பலகாமத்தின் எழில் மிகு மேடுகள், திடல்களுல் சிறந்து விளங்கும் பட்டிமேட்டில் ஆலமரத்தடியில் வீற்றிருந்து அடியார்கள் அல்லல் களைந்து உம்பர் தருவாம் கற்பகத்தருவாய்த், தேனுவாம், காமதேனுவாய், மணியாம், சிந்தாமணியாய் உம்பர் தரு, தேனு, மணிக்க சிவாகி விளங்கிடும் பிள்ளையார் பாதகமலங்களை இறைஞ்சி ஏந்துவாம்.

காலவெள்ளத்திலே கலந்து நின்ற கடவுள் காலாகாலனாய் காலாதீதனாய் விளங்குகின்றான். பட்டிமேட்டில் சிறந்த சிவபக்தராய் விளங்கியவர் சுப்பிரமணிய உடையார். தம்பைநகர் வளர் ஹம்சகமனாம்பிகா தேவி சமேத கோணேசரை உதயத்தில் தரிசித்து வந்தே அன்றாட விஷயங்களைக் கவனிப்பவர் சுப்பிரமணிய உடையார்.

பெரியம்மை என்றும் கோதாரி என்றும் பெயர் பெற்ற கொடுநோய் திருக்கோணமலையில் தலைவிரித்தாடிய காலமது. தம்பலகாமமும் அதற்கு விதிவிலக்காயமையவில்லை. ஒரு திடலில் இருந்து மற்றோர் திடலுக்கு செல்லுவதோ அல்லது ஒரு மேட்டில் இருந்து மற்றோர் மேட்டிற்கு செல்லுவதோ தடை செய்யப்பட்ட காலமது.

பட்டிமேட்டில் இருந்து கோயில் குடியிருப்புக்குச் சுவாமி தரிசனத்திற்கு சென்று வந்த சுப்பிரமணிய உடையாரது நித்திய கர்மானுஷ்டானம் தடைப்பட்டது, ஆலடியில் எழுந்திருந்த விநாயகன் ஆதரவளித்தான்.

கோணேசரது தரிசனத்தை செய்ய முடியாது வருந்திய சுப்பிரமணிய உடையாருக்கு ஆலடியான் அருள் சுரந்தான். தங்கம்மா நமசிவாயம் சுப்பிரமணிய உடையாரது தமக்கை ஆலடியானுக்கு ஆலயம் அமைக்க முற்பட்டார். இவர் தான் தம்பலகாமம் கோணேசர் ஆலயத்திற்கு கொடித் தம்பம் தாம்பரத்தில் திருப்பணி செய்து கொடுத்தவர். (நாடராசா வைராவியர் தற்போது கோவில் திருப்பணி செய்கின்றார்)

கோணாமலையார் இவர் தம் தந்தை முருகப்பர் இவருடைய தகப்பன் இவர் தம் உடன்பிறப்பிடம் கனவில் தோன்றி ஆலடி விநாயகர் ஆலயம் அமைக்க முற்பட்டார். செங்கற் திருப்பணி ஆரம்பமானது ஆலமரத்தடியில் அமைந்த விநாயகர் செங்கல் திருப்பணியாலான ஆலயத்துட்குடி புகுந்தார்.

அழகுற ஆலயம் அமைந்தது. உடையார் குடும்பத்தாருடன் வைராவியர் குடும்பமும், தோம்பர் குடும்பமும் உறவுமுறையால் இணைந்தது போல் திருப்பணியிலும் ஒன்றிணைந்து அர்த்த மண்டபம், மகா மண்டபம் கொண்ட ஆலயம் தோன்றியது. ஆலடிப் பிள்ளையார் சிந்தாமணிப் பிள்ளையாரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1933 ம் ஆண்டு மூலஸ்தானம் இடிபாடு கொண்டு காணப்பட்டது. தங்கம்மா நமசிவாயம் கற்பணி ஆரம்பித்து கற்பக்கிரகமமைத்தார்.

1933 இல் தைத்திங்கள் புனர் பூச நன் நாளில் விநாயகனுக்கு கும்பாபிஷேகம் கண்டனர். பிரம்ம ஸ்ரீ இ.ஞானசேகர குருக்கள் திருக்கோணமலை விஸ்வநாதர் ஆலய அர்ச்சகர் அவர்களால் கும்பாபிஷேகத்திருப்பணி நிறைவுள்ளது.

1933 ஆம் ஆண்டு ஆரம்பமான அலங்கார உற்சவம் தொடர்ந்து 10 வருடங்கள் நடைபெற்று வந்தது. 194௨ தைத்திங்கள் தங்கம்மா நமசிவாயம் தனது 106 ம் வயதில் உயிர் நீங்க ௨ ம் உலக யுத்த குண்டு விழ்ச்சியோடு உட்சவம் நின்றுவிட்டது.

1948 ம் ஆண்டு வைகாசித்திங்கள் புனர்பூசத்திருநாள் அன்று சுப்பிரமணிய உடையாரது மகன் காளியப்புவின் மனைவி மகமாகிப்பிள்ளை மீண்டுமோர் புனருத்தாரண கும்பாபிஷேத்தை மயில்வாகன குருக்கள் மகன் சிவ ஸ்ரீ சிவ சுப்பிரமணியக் குருக்களாம் சைவக்குருக்கள் மூலம் நிறைவு செய்தார்.

197௨ ம் வருடம் திருக்கோணமலை பிரம்ம ஸ்ரீ தி. சிவசுப்பிரமணியக்குருக்கள் மூலம் பாலஸ்தாபனம் செய்யப்பட்ட சிந்தாமணிப்பிள்ளையார்.

198௨ ம் ஆண்டு ஆவணித்திங்கள் சித்திரை நன் நாளில் மீண்டுமோர் கும்பாபிஷேகம் செய்து கொள்ள திருவுள்ளம் கொண்டார்.

சுன்னாகம் பிரம்ம ஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்களது தலைமையில் பஞ்ச குண்டகளமைத்து கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்றது.

1933 ம் ஆண்டும் 1948 ம் ஆண்டும் ஏக குண்டங்கள் கொண்ட மகா கும்பாபிஷேகங்களின் பின் இன்று 1982 ஆகஸ்ட் ௨3 ம் திகதி தம்பலகாமம் பட்டிமேட்டு சிந்தாமணி விநாயகன் பஞ்ச குண்டகளமைத்து காணுகின்ற மகா கும்பாபிஷேகத்திற் பங்குகொள்ளும் அடியார்கட்கு அருள் சுரக்கின்றார்.

**(198௨ இல் நடைபெற்ற கும்பாபிஷேக மலரில் வெளிவந்த கட்டுரை)**



## மோதகத்தின் தத்துவம்



**கணபதி வழிபாட்டில் மோதகம் மிக முக்கியமான நிவேதனம் பொருள், மோதகம் விநாயகரின் வயிற்றைக் குறிக்கும். வயிற்றிலுள் சகல புவனங்களும் அடங்குவதை உள்ளடக்கிய பருப்பு, தேங்காய் துருவல், சர்க்கரை ஆகிய மூன்றும் மாவால் மூடப்பட்டிருக்கின்றது. மாவாகிய பாகம் மாஙய. பருப்பு சத்தி தேங்காய்த் தருவல் பத்தி, சர்க்கரை ஆனந்தம் அவர் திருகரத்தில் உள்ள மோதகம் இவ் உண்மையை எடுத்துக் காட்டுகின்றது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் இடம் பெற்ற சம்பவங்கள்.



ஆலய குரு சிவஸ்ரீ சு. சோமசுந்தரக் குருக்கள் எண்ணைக் காப்பிடுதல்.




ஆலயத்தில் 60 வருட சேவையாற்றிய சிவஸ்ரீ சு. சோமசுந்தரக் குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1982 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் இடம் பெற்ற காட்சிகள்.





# நான் கண்ட சோமசுந்தரக் குருக்கள் ஐயா



கமுகு, தென்னை, மா, பலா, சோலையுடன் கந்தளாய்க் குளத்து நீர் நிலைகள் சுற்றி வர பசுவினம், எருமையினம், பட்டிகள் அமைந்த காரணப் பெயர் கொண்ட பட்டிமேடு தனில் அனைத்து வீட்டிலும் பால் பொங்கும் மணம் கமழும் பதியுரை ஆலடிப் பிள்ளையார் என ஆரம்ப நாமம் கொண்டது. இந்த ஆலயம் சிந்தாமணிப் பிள்ளையார் என்ற நாமம் கொண்டு விளங்கும் காலத்தே விநாயகரை அருட்சிக்க 1933 இல் அட்டலட்சணமும் ஒருங்கே அமையப் பெற்ற அழகிய தோற்றம் கொண்ட 19 வயது நிரம்பிய குருத்துவம் பெற்ற சிறுவனாக சுப்பையாக் குருக்கள் சோமசுந்தரக்குருக்கள் என்பவர் அங்கு வந்து அமர்ந்தார். கடவுள் பக்திக்கும் நம்பிக்கை விசுவாசத்திற்கும் இவர் ஓர் இலக்கணபுருஷர். கடமை,கண்ணியம், கட்டுப்பாடு என்ற கோட்பாடுகளுக்கு இணங்க மிக்க திறமையும், நேர்மையும் திடகாத்திரமும் கொண்ட அஞ்சா நெஞ்சம் படைத்த ஒருவராகவும் இள வயதினிலேயே திகழ்ந்தார். ஆலய கிரிகை முறைகளிலே விதிமுறை தவறாது நடாத்துவதில் யாரும் இவருக்கு ஈடாகமாட்டார். இவர் தனது ௨௪ வது வயதிலே திருமணம் செய்து கொண்டார். இவரை இவ் ஆலயத்தில் அமர்த்தி பேணி, மதிப்பழித்து, வழிநடாத்தி வந்த பெருமை இவ் ஆலய ஆதீன கர்த்தாக்கள் வழி வந்த திரு சு.கா.சிவசுப்பிரமணியம் அவர்களையே சாரும். கருணை உள்ளம் படைத்தவர், பசித்தவர் பார்த்திரார் . சாதாரண கூலி வேலை செய்பவர் கூட இவருக்கு மதிப்பழிப்பது கண்கூடு. எனது 9 வயது முதல் இவரை நன்கு அறிவேன். தனது சொந்த விடங்களில் ஆத்திரமடைவதும் கோபப்படுவதும் உண்டு ஆனால் அவை கணப் பொழுதில் மறைந்து விடும். பழிவாங்கல், வஞ்சித்தல் போன்ற குணங்கள் இவருக்கு விதிவிலக்கு. கொடுத்து உதவுவதிலும், கொடுத்து உண்பதிலும் இவர் முதன்மையானவர். இன்னும் சொல்லப் போனால் இவர் ஓர் குணக் குன்று.

எனினும் என்ன இறைவன் சோதனையோ அதுதான் அவரது தலைவித்யோ தெரியவில்லை அவரத இல்லத் துணைவியாரை காலன் அழைத்தது. மீள 19ய இல் மறுமணம் நடைபெற்று நான்கு ஆண் ஒரு பெண் என மக்களைப் பெற்று மகிழ்வோடு விநாயகர் தொண்டோடு மட்டுமன்றி தம்பலகாமம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் முதலாம் கிளையின் நெல் பகுதி,சில்லறை விற்பனைப்பகுதி,பிடவை விற்பனைப்பகுதி என்பவற்றிற்கு முகாமையாளராகக் கடமையாற்றி மேலதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெற்றது மட்டுமன்றி ஏனைய கிளைகள் அனைத்துள்ளும் முதலாவது திறமையான சங்கம் என்ற பெயரினைப் பெற்றுக் கொடுத்த பெருமையும் இவரையே சாரும். இவரது மக்களும் அவ்வப்போது திருமணம் நடைபெற்று பல இடங்களில் பிரிந்து வாழ வழி சமைத்துக் கொடுத்தார். இவ்வாறு தனது கடமைகளைச் சரியாகச் செய்து வரும் நாளில் இவரது இரண்டாவது மனைவியும் இறைவனடி சேர்ந்தார். இறுதியில் இவர் தனிமையாகவே இருந்து விநாயகரின் தொண்டினைச் செய்து வரலானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேளைதான் 1990 ம் ஆண்டளவில் கலவரங்களும்,வன்செயல்களும் இடம் பெறத் தொடங்கின. இதனால் தம்பலகாமம் மக்களும் இடம் பெயரத் தொடங்கினர். இதன் நிமித்தம் காரணமாக தம்பலாமம் ஆதிகோணநாயகர் தேவஸ் தானத்திலும் சிவனார் பூசை நின்று விட்ட நிலையில் அதனை தொடர விடாது இரண்டு ஆலயத்திற்கும் இவரே பூசை செய்து வந்தார். சிவனுக்கும் அருட்சிக்க வேண்டும் என்ற விருப்பம் போலும் அதனால் தான் அவருக்கு இந்த பாக்கியம் கிடைத்தது. இவ்வாறு செயலாற்றி வந்த இவருக்கு 60 வருடசேவையினை பாராட்டி தம்பலகாமம் சைவப்பெருமக்கள் பெருவிழா எடுத்து பணமுடிப்பு வழங்கி கௌரவித்தனர். இதன் பின்னர் தான் இவரது உடல் நிலை சற்று தளரவே தனது மூத்த மகனான திரு சோ. சண்முக சுந்தரத்திடம் சென்று கிளிநொச்சியில் அவருடனும் பேரப்பிள்ளைகளுடனும் சந்தோஷமாக சிறிது நாள் இருந்து 1995 ம் ஆண்டில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரது சேவையும் , அன்னாரத தொண்டும் ,அவரது ஆத்மாவை சாந்தி பெறச் செய்வதாக .

க.நாகராசா.
தம்பலகாமம்.



ஆலய ஆதீன கர்த்தாவும்.
பிரதம குரு சோமசுந்தரக் குருக்கள் ஐயாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தாமணிப்பிள்ளையார் துதி

(கழகப்புலவர் திரு பெ.பொ. சிவசேகரனார்.)

எண்ணிய தெல்லாம் எளிதில்
எய்திடச் செய்வார் எங்கள்
தண்ணிய வயல்கள் சூழந்
தம்பல காமந் தன்னில்
புண்ணியர் கூடி வாழும்
பொன் கொழி பட்டி மேட்டு
மண்ணில் உதித்த சிந்தா
மணியெனும் பிள்ளை யாரே.

விருப்போடு அடைவார் தம்மின்
வேதனை யாவுந் தீர்த்துத்
திருப்பணி புரிய வைப்பான்
தேடிய பொருளுமாவான்
கருக்கொளும் வானைக் கண்டு
களிப்புறும் பட்டிமேட்டியில்
மருப்போடு விளங்குஞ் சிந்தா
மணி எனும் பிள்ளையாரே

போற்றிடும் அடியார் தம்மை
புவியினில் காக்கும் பிள்ளை
விற்றிருந் தருளிப் பட்டி
மேட்டவர் கிரங்கும் பிள்ளை
கூற்றினை உதைத்தான் பெற்ற
குலமுதற் பிள்ளை எங்கள்
மாற்றினில் உயர்ந்த சிந்தா
மணியேனும் பிள்ளையாரே

எம்பெரு மானே போற்றி
எளியவர்க் கினியாய் போற்றி
தம்பல காமம் போற்றுந்
தனிப் பெருஞ் செல்வா போற்றி
நம்பிடும் பட்டி மேட்டார்
நலிவுறு வண்ணங் காக்கும்
மங்கல கரத்தாய் சிந்தா
மணியேனும் பிள்ளையாய் போற்றி

வெற்றிவேற் பொருமான் மகிழும்
விநாயக மணியே போற்றி
கற்பக மாகி வந்து
கருணை செய் களிறே போற்றி
மற்புய முடையாய் சிந்தா
மணியேனும் பிள்ளாய் போற்றி
பொற்புறு பட்டிமேட்டுப்
புனிதனே போற்றி போற்றி

ஜஜஜஜஜ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விநாயகர் தத்துவம்

## பாபாவின் விளக்கம்

கணேசரின் யானைத் தலையின் தத்துவம் யாதெனில் யானை சிறந்த அறிவு படைத்தது யானைக்கு மேதா சக்தி அதிகம் மேலும் யானையின் காதுகள் பெரியதாக இருப்பதால் நுண்ணிய சப்தத்தைக் கூட அதனால் கிரகிக்க முடிகின்றது. இறைவன் புகழைக் கேட்பது எங்கிற ஆன்மிக சாதனையின் முதற்படிக்கு காதுகள் கூர்மையாய் இருப்பது அவசியம் யானை புகழ்ச்சியையும் இகழ்ச்சியையும் ஒரே மாதிரி எடுத்துக் கொள்கின்றது. தேவையற்றவையை உதறி விடுகிறது. நல்ல விஷயங்களை மௌனமாக ஏற்றுக் கொள்கின்றது. இவ்வாறு மனிதகுலத்திற்கு அத்தியாவசியமான பாடங்களை விநாயகர் நமக்கு கற்றுத் தருகிறார்.

**வாகனம் மூஞ்சுறு தத்துவம்.**

அவரது வாகனம் மூஞ்சுறு. மூஞ்சுறு இருளில் தான் சஞ்சரிக்கும். அத்துடன் மூஷிகத்திற்கு வாசனை பிடிக்கும் வாசனை பிடித்துக் கொண்டே எந்தெந்த உணவுப்பொருள் எங்கிருக்கிறது எனக் கண்டு கொள்ளும். ஆன்மீகத்தில் இருள் என்பது அஞ்ஞானத்தையும் வாசனை என்பது ஆசைகளையும் குறிக்கிறது எனவே தான் அஞ்ஞானத்தையும் , ஆசைகளையும் கட்டுப்பாட்டில் வைப்பவர் என்பதை விளக்கவே அவற்றின் உருவமாக விளங்கும் மூஷிகத்தை வாகனமாகக் கொண்டு உள்ளனர்.

விநாயகர் சதுர்த்தியில விசேடமான உணவுப்பண்டங்கள் கடவுளுக்கு நிவேதனமாக அளிக்கப்படுகின்றன. அப்பண்டங்கள் நீராவியில் தயாரித்தவை அல்லது எள் அறுவடையாகும். எள்ளானது சுவாச சம்பந்தமான நோய்களையும் கண் நோய்களையும் தீர்க்க வல்லது. நீராவியில் வெந்த பண்டங்கள் சீரணிக்க கூடியவை ஆகும். இவ்வாறு முன்னோர்கள் ஆரோக்கியமும் ஆனந்தமும் கூடிய வகையில் இறைவனை வழிபட்டார்கள்.

விநாயகர் பூஜைக்கு

விநாயகர் பூஜைக்கு அறுகம்புல் பயன்படுத்தப்படுகிறது. அதற்குரிய காரணத்தை விளக்க புராணங்களிலே ஒரு நிகழ்ச்சி கூறப்படுகிறது. ஒரு முறை சிவபெருமானும் பார்வதியும் கைலாயத்தில் தாயம் ஆடிக்கொண்டிருந்தார்கள். இதில் யார் வென்றது என தீர்ப்புக் கூறும் பொறுப்பு நந்தியுடையதாக ஒப்படைக்கப் ட்டிருந்தது. நந்திக்கு ஈஸ்வரன் மீது அபிமானம் அதிகம் அதனால் தோற்ற போது கூட ஸ்வரனை வென்றதாக அறிவித்தார். பார்வதி கோபத்தால் நந்தியை சபித்தார்.நந்தி பார்வதியின் பாதம் பணிந்து பாவ விமோசனம் கோர ,பார்வதி மனமிரங்கி ,ஆவணிச் சதுர்த்தியில் என் மகன் கணபதியின் பிறந்த தினத்தில் உனக்குப் பிரியமான அறுகம் புல்லினால் அர்ச்சனை செய்தால் உன் சாபம் நீங்கும் என அருளினார்.

இதிலிருந்து யாருக்கு என்ன பிடிக்குமோ அதை இறைவனுக்குப் படைத்தால் பாவம் விலகும் என்பது தெளிவாகச் சொல்லப்படுகிறது. இந்தச் சத்தியத்தை ஸ்தாபிப்பது தான் விநாயக தத்துவம்.

உயிர் வாழ்க்கைக்கே தலைவர் விநாயகர். சுயநலம், சுயலாப நோக்கம் அவற்றை வைத்துக் கொண்டு வாழக்கூடாது என்று உணர்த்துபவர்,சுயநலத்தை தியாகம் செய்ய வேண்டும். பிறர் நலன் நாடி ஆன்மீக வாழ்க்கை நடாத்த வேண்டும் . அதன் மூலம் தெய்வீகத்தை உணர்ந்து கொள்ளள வேண்டும். இதுவே நிஜமான விநாயக தத்துவம்.

-நன்றி இறைதூதன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரணவ சொரூபி

("சிவநெறிச் செல்வர்" வை. அநவரதவிநாயகமூர்த்தி)

**பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்**
**சரண அற்புத மலர் தலைக் கணிவோமே**

விநாயகப் பெருமான் பிரணவ சொரூபியாக விளங்குகிறார். பிரணவம் "ஓம்" என்னும் மூலமந்திரத்தை ஆதாரமாகக் கொண்டு விளங்குகிறது. ஆதியும் அந்தமும் இல்லாத பரம் பொருளிடமிருந்து முதலாவது உண்டாகிய படைப்பு "ஓம்" என்னும் பிரணவ நாதமேயாகும். பிரபஞ்ச உற்பத்திக்கு முதற் காரணமாக விளங்குவதும் அதுவே. எந்த வகையான மந்திரங்களை ஒப்புகினும் முதலாவதாக ஓதப்படுவது பிரணவ மந்திரமே. இந்தப் பிரணவ மந்திரத்துள் பல தத்துவப் பொருள்கள் அடங்கியுள்ளன.

"ஓம்" என்னும் மந்திரத்தில் அ, உ, ம், என்ற மூன்று எழுத்துக்களின் உச்சரிப்பு சேர்ந்திருப்பதை அவதானிக்கலாம். அதில் "அ" என்ற எழுத்து நம்முடைய வயிற்றுப் பகுதியிலிருந்து சக்தியுடன் எழுந்து வருகிறது. "உ" என்பது நமது கண்டத்திலிருந்து புறப்படுகிறது. நாம் முடிக்கும் "ம்" என்ற எழுத்து இந்த உச்சரிப்பை உதடுகளை மூடி முடித்து வைக்கிறது. நமது ரிஷிகள் இந்த மூன்றையும் இணைத்தே பிரணவ மந்திரமாக அமைத்திருக்கிறார்கள். அந்த "ஓம்" என்னும் ஒலியின் வரி வடிவமே விநாயகப் பெருமானின் திருவுருவமாகும். அதனால் "ஓங்காரரூபன்" என்று எம் பெருமான் அழைக்கப்படுகிறார். ஓங்காரத்தின் இடப்புறம் மட்டுமே ஒரு கோடு இருக்கிறது. வலப்புறம் கோடு இல்லை விநாயகப் பெருமானுக்கு இடப்புறம் மட்டும் ஒரு கொம்பு உண்டு. வலப்புறம் கொம்பு இல்லை.

ஓங்காரம் ஒலிகளுக்கெல்லாம் மூலமாக விளங்குவது விநாயகப் பெருமானின் யானை முகம் ஓங்காரமாகிய பிரணவ மந்திரத்தைக் குறிப்பது. அவரது திருமேனி ஞான மயமானது எனவே எம் பெருமானை "ஞான முதல்வன்" ஞானக் கொழுந்து என்று சமய நூல்கள் புகழ்ந்து போற்றுகின்றன. அவரின் திருப்பாதங்கள் ஞான சக்தியும் கிரியா சக்தியுமாகும். முக்கண்கள் முச்சுடரையும் உணர்த்துகின்றன.

விநாயகப் பெருமான் மந்திர சொரூபமாக விளங்குகின்றார். சமஷ்டிப் பிரணவம், வியஷ்டிப் பிரணவம் ஆகிய இரண்டு பிரணவ மந்திரங்களின் மீது பார்வதி பரமேஸ்வரர் தங்கள் திருக்கண் சாத்த அம் மந்திரங்கள் யானை உருவம் கொண்டு மருவ அதனின்றும் அவதாரம் செய்தவர் விநாயகப் பெருமான். எனவே சதை,இரத்தம் ஆகிய கலப்பு இல்லாமல் முழுவதும் மந்திர சொரூபமானவர் விநாயகப் பெருமான்.

விநாயகருக்கு கணபதி,விக்னேஸ்வரன்,ஏகதந்தன்,பிள்ளையார் முதலிய பல திருநாமங்கள் உள்ளன. சிவ கணங்களுக்கெல்லாம் தலைவராக இருப்பதனால் கணபதி என்று போற்றி துதிக்கப்படுகின்றார். கணபதி என்னும் சொல்லில் "க" என்னும் எழுத்து ஞானத்தைக் குறிக்கிறது. "ண" என்னும் எழுத்து ஜீவன்களின் மோட்சத்தைக் குறிக்கிறது."பதி" என்பது தலைவன் எனப் பொருள்படுகிறது. எனவே ஞானத்திற்கும் மோட்சத்திற்கும் தலைவனாய் பரப்பிரம்ம சொரூபியாயிருப்பவரே "கணபதி" என்றும் பொருள் கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யன்போடு தன்னை வழிபட்டு இயற்றும் கருமங்களை இடையூறின்றி இனிது நிறைவேற செய்வதனால் (விக்ன + ஈஸ்வரன்) விக்னேஸ்வரன் என்றும் ஒற்றைக் கொம்பை உடையவரான தன்மையினால் "ஏகதந்தன்" என்றும் தனக்கு மேலான ஒரு தலைவன் இல்லாமல் தானே அனைவருக்கும் நாயகனாக விளங்குகின்றமையால் விநாயகன் என்றும் போற்றப்படுகின்றார். பார்வதி பரமேஸ்வரனின் மூத்த பிள்ளையாக உலக வழக்கில் கருதப்படுவதால் "பிள்ளையார்" என்றும் அடியார்களால் அன்புடன் அழைக்கப்படுகிறார்.

விநாயகப் பெருமானை வழிபடாது தொடங்கிய எக் காரியமும் நிறைவேறாது.

"என்னரே யாயினும் யாவதொன் றெண்ணுதல்.
முன்னரே எனது தாள் முடியுறப் பணிவரேல்
அன்னர் தம் சிந்தை போல் ஆக்குதி - அல்துணை
உன்னலார் செய்கையை ஊறு செய்திடு நீ"

என்று சிவபெருமானே ஸ்ரீ விநாயகப் பெருமானிடம் அவரது அவதாரத்தின் போது கூறியுள்ளார். என்றுகுறிப்பிடப்படுகிறது. பழந்தமிழ்ப் பாடல் ஒன்று.

விநாயகர் எல்லா நன்மைகளையும் நமக்கு அருளுபவர். எந்த நல்ல காரியமும் புதிதாக ஆரம்பிக்கும் போது முதலில் விக்கினேஸ்வரர் பூசையைச் செய்ய வேண்டும். அதற்கு விநாயகர்படம் அல்லது சிலை அதுவும் கிடைக்காவிட்டால் பசுவின் சாணத்தில் அல்லது மஞ்சள் மாவில் அவரை உருவாக்கி விடலாம். விநாயகப் பெருமானுக்கு மிக உயர்ந்த நிவேதனங்களைப் படைப்பதற்கு வேண்டிய அவசியமுமில்லை. அறுகம்புல் அநேகமாக எங்கும் கிடைக்கும். இந்த அறுகம் புல்லினால் மனதார அர்ச்சனை செய்தால் போதும் உள்ளன் போடு செய்யும் எந்தப் பூசையையும் அவர் ஏற்றுக் கொள்வார். மலர்களை விட கணபதிக்கு மிகவும் உகந்தது அறுகம்புல் இவ்வாறு எம் பெருமான் தனது வழிபாட்டை எல்லோருக்கும் எளிமையாக ஆக்கியிருப்பார்.

விநாயகப் பெருமானை வழிபட்டு வந்தால் மூன்று தேவியர்களின் முழு அனுக்கிரகமும் நமக்குக் கிடைக்கும். வாக்குக்கு தேவி சரஸ்வதி. மனதுக்கு தேவி பார்வதி, செல்வத்துக்கு தேவி மகாலஷ்மி ஆகிய மூவர அத்தேவியர். இதனாலேயே முழுவதும் உணர்ந்த தமிழ் மூதாட்டி ஔவைப்பிராட்டியரே,

"வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு " என்று பாடினார்.

விநாயகப் பெருமானுடைய திருவடிகளைப் பூசிப்பவருக்குக் கல்வியும், நல்லமனமும் ,செல்வமும், ஆரோக்கியமும் உண்டாகும். என்று மூதாட்டி உறுதி படக்கூறியிருப்பதனால் நாமும் எல்லாம் வல்ல பெருமானை நாள் தோறும் போற்றித் துதிப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குட்டிக் கொள்ளல்



முனிவர்களுள் முதல்வராகிய அகத்திய முனிவர் சிவபெருமானிடம் இருந்த காவிரி நதியைக் கமண்டலத்தில் அடக்கிக் கொண்டு தென்திசை நோக்கி வருவாராய் குடகு மலையில் சிவபூசை செய்து கொண்டு இருந்தார்.

அப்போது இந்திரன் சீகாழியில் பூசை செய்து கொண்டிருந்தான். மழையின்றி நந்தவனம் வாடியது.

நாரத முனிவர் இந்திரனைப் பார்த்து "அகத்தியருடைய கமண்டலத்தில் உள்ள காவிரி பெருகுமானால் உன் பூங்கா பொலிவு பெறும் ;" என்று கூறினார்.

இந்திரன் விநாயகரை வழிபட்டு வேண்டிக் கொண்டான். விநாயக மூர்த்தி காக்கை வடிவுடன் சென்று காவிரியடங்கிய கமண்டலத்தின் மீது அமர்ந்தார். அகத்தியர் காகத்தை கரத்தால் ஒட்டினார். காகம் உந்திப் பறந்தது. கமண்டலம் கவிழ்ந்து காவிரி பெருக்கெடுத்து ஓடியது.

அகத்தியர் காகத்தின் மீது சீறிப்பாய்ந்தார். அது அந்தணச் சிறுவனாகி நின்றது. அச்சிறுவனை இரு கரங்களாலும் குட்டும் பொருட்டு குறுமுனி ஓடினார். பிள்ளையார் அவருக்கு அகப்படாமல் அங்கும் இங்குமாக ஓடினார். அகத்தியர் அச் சிறுவனை அணுகிக் குட்டுவதற்கு இரு கரங்களையும் ஓங்கினார். ஐங்கரங்களுடன் விநாயகர் காட்சி தந்தருளினார் அகத்தியர் திகைத்து நடு நடுங்கினார்.

"ஓங்காரப் பொருளே ! "வேத வித்தகனே ! உன்னைச் சிறியேன் அறியேனாகிக் குட்டுவதற்குக் கையை ஓங்கினேனே. என்னே என் சிறுமதி " என்று தன் சென்னியிலேயே குட்டிக் கொண்டார். விநாயகர் அவருடைய கரங்களைப் பற்றிக் கருணை புரிந்தார். "இன்று முதல் நம் திருமுன் பய பக்தியுடன் சென்னியில் குட்டிக் கொண்டோர் கூரிய மதியும், சீரிய நிதியும் பெறுவார்கள்" என்று வரமளித்தருளினார். இதனால் , விநாயகரின் திருமுன் அடியார்கள் சிரத்தில், குட்டிக் கொள்ளும் மரபு உண்டாயிற்று

**திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்**

*****

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆனைமுகனும் அறுகம் புல் வழிபாடும்

கலாநிதி சபா ஜெயராசா ( யாழ் பல்கலைக் கழகம்)

இணுவில் பரராச சேகரப் பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் செம்பொன் மணி நிலத்தில், மாரி தவழுங் காலங்களில் மரகதப் பச்சை விரிப்பாக அறுகம்புல் படர்ந்து வளர்ந்து பரவிச் செழித்திருக்கும். அறுகம்புல்லின் மகிமை புராணங்களிலே சிறப்பாக விநாயக புராணத்திலே விதந்து உரைக்கப்பட்டுள்ளமையை யாவரும் அறிவர்.

பார்க்கவ புராணத்திலே ஆனைமுகக் கடவுளுடைய பெருமை மிகவும் விரிவாக விளக்கப் பெற்றுள்ளது. பார்க்கவ புராணம் பிருகு முனிவரால் வழங்கப்பெற்றது. பிருகு முனிவர், இப் புராணம் யாவர்க்கும் பயன்படவேண்டும் என்னும் இலட்சியத்தோடு உபாசனா காண்டம், லீலா காண்டம் என்னும் இரண்டு காண்டங்களாக அமைத்து, அவற்றை இருநூற்றைம்பது பிரிவுகளாக்கிப் பன்னிரண்டாயிரஞ் சுலோகங்களால் ஒரு புராணமாக்கினார்.

முதலாவது உபாசனா காண்டத்தில் அறுமுகம் புல்லின் பெருமை விதந்து உரைக்கப்பட்டுள்ளது. நறுமணமுடைய பலவகையான மலர்கள் இருக்கவும், அறுகினால் நான்முகனை ஏன் வழிபட வேண்டும் என்பதை விளக்க , அவந்தி பட்டணத்திலுள்ள சுபலன் என்னும் பெயருடைய ஓர் அரசனுடைய கதை கூறப்படுகிறது. சுபலனுடைய மனைவியின் பெயர் சுபத்திரை. அவர்களைத் தேடி வந்த அந்தணனுடைய பெயர் மதுசூதன். அம் மூவரையும் அடியொற்றி அவர்கள் இயற்றிய செயல்களால் அறுகின் பெருமை உரைக்கப்படுகின்றது.

மேலும், அனலாசுரனை அழித்த ஆனைமுகக் கடவுளின் வெப்பம் தண்ணெனக் குளிரும் வண்ணம் எண்பதாயிரம் முனிவர்கள் அங்கு வந்து ஒவ்வொருவரும் இருபத்தோரறுகுகளை முடிமுதல் அடிவரை சொரிந்தார்கள் என்பதும் விநாயக புராணத்திலே எடுத்துரைக்கப்ப பெறுகின்றது.

சனக மன்னனுடைய பசு அறிவைப் போக்கிப் பதியறிவைக் கொடுத்து ஆட் கொண்ட நிகழ்ச்சியிலும் அறுகின் பெருமை விளக்கப்பட்டுள்ளது. ஒரு புல்லுக்கு. நிகராகுமா குபேரனுடைய செல்வம் ; என்று கூறுமளவுக்கு அறுகின் நிறைகோல் ஏறிய வரலாறு உண்டு. "ஆனைமுகக் கடவுளினுடைய திருவடிகளிலே சேர்க்கும் அறுகுக்கு இந்திரன் முதலானவர்களுடைய செல்வமும் ஒப்பாகாது. " என்பது விநாயக புராணம் விளக்கும் உண்மை.

புராணங்கள் சாதாரண மக்களுக்கு நல்லறிவூட்டும் அறிவுக் கருவூலங்கள் என்று கொள்ளப்படும் பொழுது, புராணங்களின் இலக்கியப் பண்பில் உட் பொதிந்து காணப்படும் படிமவாக்கங்களும், குறியீட்டுப் பண்புகளும் ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்க்கின்றன. அறுகு என்பது சாதாரணமாகத் தரையிலே படரும் ஒரு புல் என்ற எளிமை ததும்பிய படிமவாக்கம் வாமனாவதாரம் போன்ற செயல் வீச்சுடன் இணையும் வண்ணம் அமைக்கப் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

சிறியன என்று கருதப்படுபவை விந்தை மிகு அணுவின் அடக்கமாய் ஆற்றலாய் ஒளிர்விடும் புனைவிலே சாமானியர்களின் பெருமை உணர்த்தப்படுதல் நினைவுக்குரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோப்புக்கரணம்

நமது உள்ளங்காலிலிருந்து தலையுச்சிவரை அநேகம் நரம்புக் கற்றைகள் உள்ளன. நாம் சுறு சுறுப்பாக அடிக்கடி உட்கார்ந்து எழுந்திருந்தால் (தோப்புக் கரணத்தால்) அந்த நரம்புக் கற்றைகள் சுருங்கிச் சோர்வடையாமல் , இரத்தம் நன்கு பாய்ந்து மூளைக்கு பலம் கொடுக்கும் அந்த இரத்தம் மூளைக்குச் சென்றால், மனதில் சாந்தமான நினைவுகள் மலரும்.

நாம் தோப்புக்கரணம் போடும் போது உடல் அசைவில் சுஷீம்னா என்ற நாடி, தட்டி எழுப்பப்படுகிறது. இரு கரங்களில் நெற்றிப் பொட்டுக்களில் குட்டிக் கொள்ளும் போது ஸஷஸ்ராரம் என்ற இடத்திலிருந்து யோகிகளுக்கு அமிர்தம் சிந்தும், விநாயக உபாஸனையின் மூலம் சுஷீம்னா நாடி, அமிர்தகலசம் இரண்டும் ஒருங்கே இயங்குவதால் பூரண பலன்களை அடைய முடிகிறது என்பர்.

எந்த தேவதையை வணங்கத் தொடங்கினாலும் , முதல் விநாயகரை தியானித்து சுக்லாம் பரதரம் என்ற ஸ்துதியை கூறி நெற்றியில் குட்டிக் கொண்ட பின்னரே வணங்க வேண்டும். இவ்வாறுகுட்டிக் கொள்வதால் ப்ரம்ம ரந்த்ரத்தில் அமிர்தம் பெருகி நாடிகளில் பாய்ந்து உபாசகர்களுக்கு சோம்பல் முதலிய அவகுணங்களை விரட்டி நல்ல மனநிலையை அளிக்கிறது.

மூலக்கனல் என்று சொல்லப்படுவதே சுஷீம்னா என்று சொல்லப்படுவதே சுஷிம்னா நாடி. இது மனித சரீரத்தில் அடி வயிற்றின் கீழ் ஓங்கார ரூபத்தில் அமைந்து செயலாற்றுகிறது. இதைத் தட்டிச் செயல்படுத்தி மேல் நோக்கி ஸஷஸ்ரார மண்டலம் வரை செலுத்தி சிரஸிலிருக்கும் அமிர்தத்துடன் கலந்து அவ்விடமே அதை நிலை நிறுத்திக் கொண்டால் மனிதன் தன் நிலை மறந்து ப்ரும்மத்துடன் ஐக்கியப்பட்டு நிற்பான். பேரானந்தத்தைக் காண்பான். இந்த நாடியைச் செயற்படுத்துவதற்கு - தட்டி எழுப்புவதற்கு மூலாதாரத்தில் அளவில்லாத உஷ்ணத்தை உண்டு பண்ண வேண்டும். அதற்கு மனத்தை ஒரே நிலையில் ஐக்கியப்படுத்தி, நெடுங்காலம் ஐபதபங்கள் புரிய வேண்டும்.அதிக உஷ்ணமான பொருட்களை உபயோகித்து பூஜை முதலியன புரிதல் மறைமுகமாக யோகத்தீ மூட்டு என்று உணர்த்தவே யாகும்.

மூலாதாரத்திலுள்ள சுஷம்னா நாடி கணபதி என்பதாலே நமது ரிஷிகள், சாஸ்திர விற்பனர்கள் ஆகியோர் தாவர வர்க்கத்திலேயே மிக மிக உஷ்ணமான அறுகம் புல், வெள்ளெருக்கு, வன்னிபத்திரம் ஆகியவை கணபதி பூசைக்கு உகந்தவை எனக் கூறியிருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. நெற்றிப் பொட்டில் குட்டிக் கொண்ட தோப்புக்கரணம் போடுவதையும் விநாயக வழிபாடு மரபாக அமைத்துள்ளார்கள்.

பிரம்ம ஸ்ரீ வேதாகமமமாணி

சோ. இரவிச்சந்திரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பட்டிமேடுச் சிந்தாமணிப் பிள்ளையாரே



முத்துமணிகள் முற்றிய கதிர்கள்
பாரெங்கும் பரந்து சூழ்ந்திட
தென்னந் தோப்புக்கள் வாழைத்
தோட்டங்கள் இயற்கை வளங்கள்
ஆங்காங்கே குழுமியிருக்க ......

ஊர்மனையைத் தாலாட்ட
தவழ்ந்தோடும் நீரோடை
இளந் தென்றல் வீசிவர
கொக்குகள் ஒற்றைக் காலில் தவமிருக்க......

குயில்களுடன் கிளிகளும் இணைந்து
கீதங்கள் இசைத்துக் கீச்சிட
வீதியின் இருமருங்கும் வண்ண
எழில் புஷ்பங்கள் பூத்துக் குலுங்க ......

தேடி வருகின்றேன் ஊரைப்
போற்ற விரைகின்றேன்
பக்தி கொண்டு செல்வச் சிந்தாமணி
கணபதியுன் பெருமையைக் கூறி

பாரினில் யானுமோர்
பாமாலை பாடி
நல்லவரந் தாருமையா
நல்லுள்ளங்கள் போற்றிடவே ......

பால்பொங்கும் பட்டிதனில்
பாமரர்கள் சூழ்ந்து வாழ்க
நீர்வளமும் நிறைந்து
நெல் வளமும் செறிந்து ......

பட்டிமேட்டில் பழமை பெற்ற
எங்கள் சிந்தாமணி விநாயகர்
வினை தீர்த்தருளும் - ஊர்
மனைகளின் முதற் கோயில் ......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திரு. ஆ. சுப்பிரமணியம் அவர்கள்
பூரணாகுதி இடுதல்.



வைராவியர் திரு. கோ. நடராசா
அவர்கள் பூரணாகுதி இடுதல்.



ஆலயத்தின் முன்ட ற அலங்காரத் தோற்றம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசமர நிழலிலே அன்று
அமர்ந்து அடியார்க்கு
சிந்தை அருளிய எந்தை
சிந்தாமணி விநாயகனே.......

இன்று மகிழ மரநிழலில்
அமர்ந்து அகிலமெல்லாம்
அருள் தந்திட
வந்தமர்ந்த சற்குருவே.......

சேற்று நிலத்திலே உழவர்கள்
சேர்ந்து உழைத்து உயர
தோள் கொடுத்து துணைபுரியும்
வேழ முகத் தோழன்.......

கரங்களை குவித்தோருக்கு
வரங்களை வழங்கும்
வள்ளலின் வள்ளலே
பராசக்தியின் மைந்தனே.......

கொடுநோய் பரவி
பருவ காலத்தில்
அவதியுற்ற மக்களைக்
காத்த கடவுளே.......

கலவரங்கள் சூழ்ந்த
காலத்தில் கணநாதரை
கயவர்கள் கவர்ந்தெடுத்து
ஊர்தியிலே கொண்டு செல்ல......

ஊகித்து ஊர்தியை
பழுதடையச் செய்து
தம்பிருப்பிட மமர்ந்த
தரணியின் முதல்வனே.......

ஆதியிலே காணாத அரும்பொருளே தம்பைநகர்
ஊரினிலே அமர்ந்திருக்கும் உத்தமனே - குடமுழுக்கு
பாரினிலே அனைவருக்கும் நலம்கொடுக்கும்
பட்டிமேட்டில் குடியிருக்கும் சிந்தாமணிப்பிள்ளையாரே.......

பாலகிருஷ்ணன் ஹம்சபாலன்
(பெரியரசு கம்சன்)
பட்டிமேடு,
தம்பலகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தம்பலகாமம் பட்டிமேடு சிந்தாமணி விநாயகர் ஊஞ்சல்

(தம்பலகாமத்து பெரியார் ஒருவரால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் பாடப்பட்டது.)

சீர்வளர் பல் வளம் பெருகு கோணை மேவுந்
திருவளருந் தம்பை நகர் சிறந்த வாழ
மேர் வளர் சிந் தாமணி நற் கணேசன் மீது
யிசைவளரு மூஞ்சலினா லினிது போற்ற
நீர்வளர் செஞ் சடை மவுலி நிமலர் தந்த
நீலமயில் வாகனற்கு முன்னோனான
காரர்வளர்மும் மதமருவு களிற்றின் செய்ய
கதிர் வளரு மிணையடிகள் கருத்துள் வைப்பாம். 1

ஆதிமறை நான்குமுயர் கால் களாக
வங்கமோ ராறும் நல் விட்ட மாக
நீதி சிவா கமங்களே கயிற தாக
நிரஞ்சனமாம் பிரணவமே பீட மாக
கோதி லணி யூஞ்சலின் மே லினிது வைகுக்
குலவுபல வளம் பெருகுந் தம்பை வாழுந்
தீதகற்றுங் குஞ்சரமே சிறந் தைந் நாளும்
சிந்தாமணி நற்கணபதியே யாடீ ரூஞ்சல். 2

சிந்துரவா னன மாடச் செவிக ளாடத்
திருவருள் செய் விழியாடக் கரசங்க ளாடத்
தொந்திவயி றசைந்தாடத் துதிக் கை யாடத்
துலங்கு மொற் றைக் கோடாடத் தொண்ட ராடக்
கந்தமலர்ப் பதமாடச் சதங்கை யாடக்
கருது பதி னெண் கணத்தோர் கசிந்தே யாட
சிந்து தவழ் பணை கொளெழில் தம்பை வாழும்
சிந்தாமணி நற்கணபதியே யாடீ ரூஞ்சல். 3

காவிவிழி யர மகளிர் வடந் தொட் டாட்டக்
கவினுளவு மயிராணி காளாஞ் சிநீட்ட
மேவியுமை நோக்கி மனங் களிப்புக் கொள்ள
வேண்டுமடி யவர் வணங்கி வினையைத் தள்ள
நாவினறுங் கல வைமண மெங்கு நீட
நாரியர்க ளிரு புறமும் கவரி போடத்
தேவியுமை தந்தனமந்தா தம்பை வாழுஞ்
சிந்தாமணி நற் கணபதியே யாடீ ரூஞ்சல். 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திர சூரியர் கவிகை நிழலைச் செய்யத்
தகைமை பெறு மமரர் புட்ப மாரி பெய்யக்
கந்தருவர் முதற்ப திணெண் கணத்தோர் துன்னக்
காதலொடு நாரதர் யா ழிசைகள் பண்ணத்
தந்தவுமை மிகுமகிழ்வால் உள்ளம் தேங்கச்
சசி கணவ னொடு பிரமன் பாதந் தாங்கச்
சிந்தை மகிழ் நணி சிறந்து தம்பை வாழுஞ்
சிந்தாமணி நற்கணபதியே யாடீ ரூஞ்சல். 5

பவவினை தீர்த் தாள்பவரே யாடீ ரூஞ்சல்
பண்ணவர்க்குப் பண்ணவரே யாடீ ரூஞ்சல்
தவமுனிவற் கருங்குருவே யாடீ ரூஞ்சல்
தந்திமுக முடையவரே யாடீ ரூஞ்சல்
தவமணிப் பூணணிபவரே யாடீ ரூஞ்சல்
நாளுமெனமக் காப்பவரே யாடீ ரூஞ்சல்
சிவனுதவும் திருமகனே யாடீ ரூஞ்சல்
சிந்தாமணி நற்கணபதியே யாடீ ரூஞ்சல். 6

வல்லபையின் நாயகரே யாடீ ரூஞ்சல்
வந்திப்போர் துயர் தவிப்பீ ராடீ ரூஞ்சல்
கல்வியுளார் மனத்துறைவீ ராடீ ரூஞ்சல்
கருது சகத் திரப் பெயரீ ராடீ ரூஞ்சல்
நல்ல தமிழ் முனிக் கருள்வீ ராடீ ரூஞ்சல்
நாற்காவுக் காறளித்தீ ராடீ ரூஞ்சல்
தில்லையெனும் தம்பை நகர் மேவி வாழும்
சிந்தாமணி நற் கணபதியே யாடீ ரூஞ்சல். 7

தாதமார்க்க கம் முதலாம் நெறிகள் பூண்டோர்
சாந்தினிதி னொருபக்கம் துதிக ளார்ப்ப
மாதவர்கீ தங்களொலி ஒருபா லார்ப்ப
மாதவஞ் செய் கணநாதர் மகிழ்ந்தே யார்ப்ப
பாதஞ்சேர் முனிவரெலாம் ஒருபா லார்ப்ப
சீதமுறும் தம்பைநகர் மேவி வாழும்
சிந்தாமணி நற்கணபதியே ஆடி ரூஞ்சல். 8

சித்தாந்த சைவமினி தோங்கி மேவத்
தெளிவில் புறச் சமயங்கள் சிறப்பற் றேவ
பத்தினம செய்யடியார்கள் பரந்து மல்க
பண்பான பூதிகண்டி கைகள் வெல்க
முத்தி நெறி பளித் திடுமைந் தெழுந்து மோங்க
மூவாத கற்பகம் போற் கருணை தேங்கும்
சித்தினர் சேர் தம்பை நகர் மேவி வாழும்
சிந்தாமணி நற் கணபதியே யாடீ ரூஞ்சல். 9

பார்வழி சென்னல் விளை பழனம் வாழி
பாவையர்கள் கற்பு நெறி பரவி வாழி
கார்வழி யாவினங்கள் கதித்து வாழி
கருதரிய வேதியர் எக்காலும் வாழி
ஏர் வாழி சிவசமைய என்றும் வாழி
இலங்கு முயிர்த் தோற்றமெலாம் என்றும் வாழி
சீர்வாழி செய்ய தம்பை நகரும் வாழி
செப்பு விநா யகர் பதங்கள் வாழி வாழி. 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எச்சரிக்கை

சிவனார் உமை புதல்வா ஜெக தீசா எச்சரிக்கை.
பவமே களை வோனே சிவநேசா எச்சரிக்கை.

தவமே செய்யும் அடியாரருள் வாழ்வே எச்சரிக்கை.
ப்ரணனே உமை பாலா திருவே எச்சரிக்கை.

கழுணிபல சூழும் உமை பாலா எச்சரிக்கை.
கருணா கர சிவ பாலா எச்சரிக்கை.

வளமார் தம்பை நகர் வாழ் கணநாதா எச்சரிக்கை.
அழகார் புரி அமர்ந்தாய் அருள் நேசா எச்சரிக்கை.

சிறுவர் உமை செல்வா பெருமானே எச்சரிக்கை.
தருவாய் நலம் பலவும் தரு நிழலே எச்சரிக்கை.

மணியே மணி ஒளியே எமதுயிரே எச்சரிக்கை.
மலரே மலர் மணமே நறுந் தேனோ எச்சரிக்கை.

வருவார் துயர் களைவாய் குருமுனியே எச்சரிக்கை.
திருவார் நகர் வாழ்வே பெருமானே எச்சரிக்கை.

## பராக்கு

சுமுகரென பெயர் பெறும் இறைவா பராக்கு
சிந்தாமணியானே சிவமே பராக்கு

சுகம்பலவும் தந்துதவும் தந்தி பராக்கு
சிந்தாமணியானே சிவமே பராக்கு

ஏகதந்த நாயகனே எந்தாய் பராக்கு
சிந்தாமணியானே சிவமே பராக்கு

தம்பை நகர் வாழுகின்ற தேவா பராக்கு
சிந்தாமணியானே சிவமே பராக்கு

சம்பு சதாசிவ மைந்தா பராக்கு
சிந்தாமணியானே சிவமே பராக்கு

கந்தனுக் கருள் இறை கணபதி பராக்கு
சிந்தாமணியானே சிவமே பராக்கு.

## லாலி

லாலி லாலி சுப லாலி லாலி
லம்போதர சம்புசுத லாலி லாலி.

அம்பாசுத சிந்தாமணி லாலி லாலி
லாலி லாலி சுப லாலி லாலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதநாத கீதபர லாலி லாலி
போத நிறை வான பொருள் லாலி லாலி

வேழமுக நாயகனே லாலி லாலி
காலமெல்லாம் காத்தருள்வாய் லாலி லாலி

ஞான குரு தேவ தேவே லாலி லாலி
நாயகனே நற்பொருளே லாலி லாலி

கழனிபல குழலாழ்வோய் லாலி லாலி
பழமறையின் தத்துவம் லாலி லாலி

பக்தர்க்கருள் பரம் பொருளே லாலி லாலி
பக்குவர்தம் பதமதுவே லாலி லாலி

தம்பை வளர் தயாபரனே லாலி லாலி
பட்டிமேட்டு நாயகனே லாலி லாலி

நல்லவனே வல்லனே லாலி லாலி
சிந்தாமணி விநாயகனே லாலி லாலி

லாலி லாலி சுப லாலி லாலி
ஐந்துகர யானை முகத்தையா லாலி

எந்தை இறை சிந்தாமணி லாலி லாலி
லாலி லாலி சுப லாலி லாலி

## மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் ஜெய ஜெய
மங்களம் மங்களம் மங்களம்

தந்திமுக விநாயகர்க்கு
நந்திமகன் நாயகர்க்கு
இந்துமதி சூடினர்க்கு
சிந்தாமணி விநாயகர்க்கு (மங்களம்)

வல்லபை மனோகரர்க்கு
சொல்லுதமிழ் பாலகர்க்கு
நல்லவர்க்கு வல்லவர்க்கு
சிந்தாமணி விநாயகர்க்கு (மங்களம்)

ஆலடி விநாயகர்க்கு
ஆதி பொருளானவர்க்கு
ஆகமத்தின் மெய்ப் பொருட்டு
சிந்தாமணி விநாயகர்க்கு (மங்களம்)

தம்பைநகர் வாழ்பவர்க்கு
நந்துயர்கள் தீப்பவர்க்கு
சம்புசிவன் மைந்தருக்கு
சிந்தாமணி விநாயகர்க்கு (மங்களம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எம்பெருமான் திருவருள் கொண்டு ஆரம்பித்த திருப்பணி வேலைகள் யாவும் முடிக்கப்பெற்று இன்று விநாயகரின் பஞ்சகுண்டகும்பாபிஷேக பெருவிழாவும் இனிதே முற்றுப் பெற்ற. இவ் வேளை " எந்நன்றி கொன்றாலும் உய்வுண்டாம் உய்வில்லை. செய்நன்றி கொன்ற மகற்கு " என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க நடந்து முடிந்த இந் நற்பணியிலேயே முதலில்கும்பாபிஷேகப் பெருவிழாவினை நடாத்தி முடித்த சிவ ஸ்ரீ முத்து சற்குரு நாதக்குருக்கள் அவர்கட்கும், அவரதுகுழுவினருக்கும், எனது நன்றியைத் தெரிவிப்பதோடு உற்சவ மூர்த்தியினை புதிதாக அழகு மிளிர வார்த்துத் தந்த சிவ சோதிலிங்கம் ஆச்சாரி அவர்கட்கும், இப்பணி நிறைவேற பொருளுதவி ,பணஉதவி, சரீர உதவி புரிந்த அனைவருக்கும் திருப்பணித் திருத்த வேலைகளை முடித்துத் தந்த தம்பலகாமத்தைச் சேர்ந்த இளைஞன் இரத்தினராசா சசிகுமார் அவர்கட்கும் அவரது குழுவினர்க்கும் வர்ண வேலைகளை முன்னின்று செய்து தந்த திருநெல்வெலியைச் சேர்ந்த அரசரெத்தினம் அஜந்தன் அவர்கட்கும் அவரதுகுழுவினருக்கும், ஆலயத்தின் மண்டப கோப்புசம், வாகனம் ஆகிய வேலைகளைச் சிறப்புறச் செய்து உரிய வேளையில் முடித்துத் தந்த "கமலாலயம் கலைக்கூடம்" விஷ்வ பிரம்ம ஸ்ரீ கு. சந்திர மோகன் அவர்கட்கும் அவர் தம்குழுவினருக்கும், ஆலயத்திற்கான மின் இணைப்பினை நல்ல முறையிலே இணைத்துத் தந்த தம்பலகாமத்தைச் சேர்ந்த வேலாயுதம் ஜெயசீலன் (ஜெயா) அவர்கட்கும், ஆலயத்தில் நடைபெற்ற சிரமதானப் பணிகளிலே பங்கு கொண்ட ஆண், பெண் அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு சிறந்த தானங்களிலே ஒன்றான அன்னதானத்தினை சிறப்பாகவும், ஒழுங்காகவும் நடாத்த உதவிய அன்பர்கள் அவர் தம் உதவியாளருக்கும், தெரிந்தோ தெரியாமலோ விடுபட்ட அனைத்துக் கருமங்களிலும் ஒத்துழைப்பு வழங்கிய சகலருக்கும் ஆசியுரை வழங்கி மலரினைச் சிறப்பித்த அனைவருக்கும்கும்பாபிஷேக மலரினை தொகுத்தளித்த திரு வே. வரதசுந்தரம், திரு சி. குருநாதன் அவர்கட்கும் இம் மலரினை பதித்து வெளியீட்டுக்கு உதவிய திரு திருமதி சரவணபவன் (உதயன் அச்சகம்) அவர்கட்கும். எல்லாவற்றிற்கும் மேலாக சகல கருமங்களிலும் எனக்குப் பக்க பலமாக நின்று அனைத்து உதவிகளையும் மனம் சலிக்காது செய்து முடித்த திரு க. நாகராசா அவர்கட்கும் எனது உளமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதோடு கலவர காலங்கள் தொட்டு இன்று வரை பூசை செய்து வந்த நடராசா சோமஸ்கந்தன் அவர்கட்கும் விஷேடமாக ஒலி,ஒளி மற்றும் அலங்காரங்கள் அனைத்திற்கும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து அன்பர்கட்கும் எனது மேலான நன்றியினைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


காம்

இவ்வண்ணம்
சு. கா.சிவசுப்பிரமணியம்
தலைவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1982ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது பிரதம
சிவாச்சாரியார் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்
(ஸ்ரீ கதிரமலை தேவஸ்தானம், சுன்னாகம்)




1982ம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தின்போது
பங்குபற்றிய சிவாச்சாரியார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்


# விநாயகப் பெருமானின் எழில்மிகு திருக்கோலங்கள்




1. பாலகணபதி



2. பக்தி கணபதி




3. ஷக்தி கணபதி



4. ஸித்தி கணபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




5. உச்சிஷ்ட கணபதி



6. க்ஷிப்ர கணபதி




7. விஜய கணபதி




8. ஸ்ருஷ்டி கணபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



9. ருணமோசன கணபதி



10. டுண்டி கணபதி




11. த்விமுக கணபதி



12. யோக கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




13. ஏகதந்த கணபதி



14. ஹேரம்ப கணபதி




15. நிருத்த கணபதி



16. ஹரித்ரா கணபதி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




17. தருண கணபதி



18. வீர கணபதி



19. த்விஜ கணபதி




20. விக்ந கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



21. ஊர்த்துவ கணபதி



22. லக்ஷ்மி கணபதி




23. மஹா கணபதி




24. ஏகாக்ஷர கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




25. வர கணபதி



26. [illegible] ஷர கணபதி



27. க்ஷிப்ரப்ரஸாத கணபதி



28. உத்தண்ட கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



29. திரிமுக கணபதி



30. ஸிம்ஹ கணபதி



31. துர்கா கணபதி



32. ஸங்கடஹர கணபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூலஸ்தான விமானத்தின் தோற்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் பிரின்டர்ஸ், திருக்கோணமலை. தொ.பே: 026-20783